| | | |
|---|---|---|
| அ.வ.எண். | : | **130/2020** |
| தேதி | : | **07.04.2026.** |
| பெயர் | : | **ஸ்ரீனிவாசன் த/பெ. துரை** |

**வா.த.சா.1 (PW1) மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**
**(**சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது**. )**

**<u>வா.த.சா.1. (PW1) - குறுக்கு விசாரணை:</u>**

1) எனக்கு ஆங்கிலம் தெரியாது. தமிழ் ஓரளவிற்கு தான் தெரியும். நான் படிக்கவில்லை. இவ்வழக்கில் நான் தாக்கல் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. எனக்கு இந்த வழக்கை பற்றி அனுபவத்தில் என்ன தெரியுமோ அதை பற்றி தான் சாட்சியம் அளிப்பேன். இவ்வழக்கின் தாவா சொத்தின் புல எண் 67 மற்றும் 68 ஆகும். தாவா சொத்தின் வகைபாடு எனக்கு தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் 6995 சதுர அடி நிலம் ஆகும். தாவா சொத்து காலி இடமாகும்.

2) தாவா சொத்தில் பிரதிவாதிகள் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் இல்லை அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 9 வது பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ள வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிகள் தாவா சொத்தில் கட்டிய வீட்டிற்கு மின்இணைப்பு தரக்கூடாது என்று நான் ஆட்சேபனை தெரிவித்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான்.

3) பிரதிவாதிகள் தாவா சொத்தில் 6 வருடங்களுக்கு முன்பு வீடு கட்டினார்கள். தற்போது ஒரு வருடத்திற்கு முன்பு மறுபடியும் வீடு கட்டினார்கள். மேற்படி விவரத்தை எனது வாதுரை மற்றும் பிரமாண வாக்கமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். தாவா சொத்தின் உரிமை எனக்கு எனது மாமியார் வீட்டில் 2013 ம் ஆண்டு எழுதிக்கொடுத்தார்கள். வாதசாஆ 1 பாகப்பிரிவினை பத்திரத்தில் சொத்து விவரத்தில் புல எண் 67 மற்றும் 68 குறித்து குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். வாதசாஆ 2 ல் சொத்து விவரத்தில் புல எண் 66 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) வாதசாஆ 3 வரி ரசீது புல எண் 67 மற்றும் 68 க்கு கிடையாது என்றால் சரியல்ல. வாதசாஆ 4 ல் காவல் நிலைய புகாரில் நான் தாவா சொத்தை கற்பகம், தெய்வநாயகி, கலா, உதயகுமார் மற்றும் பழனி ஆகியோரிடமிருந்து கிரயம் பெற்றதாக

குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன புகாரிலும் புல எண்கள் 67 மற்றும் 68 க்கான சொத்தை பற்றியது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

5) வாதசாஆ 5 மற்றும் வாதசாஆ 6 இவ்வழக்கிற்கு சம்பந்தம் இல்லாதது என்றால் சரியல்ல. வாதசாஆ 1 மற்றும் வாதசாஆ 2 தாவா சொத்திற்கு உரிமையாளர் எனது விற்பனையாளர் பெயரில் உள்ளது என்றும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் தாவா சொத்து என் உடமையில் இருப்பதாகவும், பிரதிவாதிகள் எனது உடைமையை தொந்தரவு செய்யக்கூடாது என்று பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் புகாரானது பிரதிவாதிகள் தாவா சொத்தில் வீடு கட்டி அங்கு குடியிருந்துவருகிறார்கள் என்றும் அவர்கள் எனக்கு தொந்தரவு தருகிறார்கள் என்று தான் புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

6) தாவா சொத்தின் புல எண் 67 க்கு பிரதிவாதிகளுக்கு சொத்து வரி சம்பந்தமாக 2008 ம் ஆண்டு B Memo கொடுக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு கூறை வரி தற்போது வரை பிரதிவாதிகளால் மாங்காடு நகராட்சியில் செலுத்தப்பட்டுவருகிறது என்றால் சரியல்ல. நான் தான் செலுத்திவருகிறேன். நான் தாவா சொத்திற்கு உரிமையளார் என்று விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்து கட்டளை மட்டும் பிரதிவாதிகளுக்கு எதிராக கோரியது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், தாவா சொத்து பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் உள்ளது என்றாலும், நான் எனது உரிமை மற்றும் உடையை நிருபிக்க எந்தவித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், எனவே இந்த வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**சாட்சி கையொப்பம் Sd/. ஸ்ரீனிவாசன்**

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. P. Jagadeeswaran.
District Munsif,
Sriperumbudur.